வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3441/அ1/2021 நாள்.19.11.2021

-----

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வித் துறை – வேலூர் மாவட்டம் – தொடர் மழை காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுதல் – மாணவர்களின் பாதுகாப்பு நலன் மற்றும் எவ்வித விபத்துக்கள் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் சார்பு. |
| பார்வை | தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 014265 / ஜெ / 2021 நாள் 18-11-2021 |

-----

பார்வையில் காணும் செயல்முறை கடிதத்திற்கிணங்க தற்போது தொடர் மழைக் காலங்களில் வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை/ மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை மழைக்காலங்களில் ஏற்படும் விபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்கென உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கூடுதல் கவனம் செலுத்தி செயல்படுமாறும் அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

1. தொடர் மழையின் காரணமாக பள்ளியின் சுற்றுச்சுவர் மிகுந்த ஈரப்பதத்துடன் காணப்படலாம். எனவே சுற்றுச்சுவரிலிருந்து 20அடி தொலைவு வரை மாணவர்கள் யாரும் செல்லாதவாறு தடுப்புகள் ஏற்படுத்துவதுடன் மாணவர்கள் செல்லாதவாறு கண்கணிக்க வேண்டும்.

2. மழையின் காரணமாக பள்ளியின் சில வகுப்பறைகள் பாதிக்கப்பட்டிருப்பின் அத்தகைய வகுப்பறைகளை பயன்படுத்தாமல் பாதுகாப்பாக பூட்டிவைப்பதுடன் அவற்றின் அருகே மாணவர்கள் செல்லாதவாறு கண்காணிக்க வேண்டும். மேலும் இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்கள் இருப்பின் மாணவர்கள் அத்தகைய கட்டிடங்களை அணுகாதவாறு அதனைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்திட வேண்டும்.

3. மின் இணைப்புகள் சரியாக உள்ளனவா என்றும், மின்கசிவு, மின்சுற்று கோளாறுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை ஆய்வு செய்து பாதுகாப்பை உறுதிபடுத்திடவும், தேவையெனில் மின் இணைப்பை தற்காலிகமாக துண்டித்து வைக்கவும் அறிவுறுத்தப்படுகிறது. இத்தகைய நேர்வுகளில் மின்வாரிய பொறியாளரை உடனடியாக தொடர்பு கொண்டுஇதனை சரிசெய்திட அறிவுறுத்தப்படுகிறது.

4. பள்ளி வளாகத்தில் உள்ள நீர்தேக்கப் பள்ளங்கள், திறந்தவெளி கிணறுகள், கழிவுநீர்த் தொட்டி மற்றும் நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கும்பட்சத்தில் அவையனைத்தும் மூடப்பட்ட நிலையில் உள்ளனவா என்பதை உறுதி செய்வதுடன் மாணவர்கள் அருகில் செல்லாதவாறு கண்காணிக்க வேண்டும்.

.5. விடுமுறை நாட்களில் ஏரி, குளம் மற்றும் ஆறுகளில் குளிப்பதை மாணவர்கள் தவிர்த்திட அறிவுறுத்த வேண்டும். மழைக்காலங்களில் ஏரிகளில் உடைப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் விடுமுறை காலங்களில் வெளியே செல்வதை தவிர்க்கவும், குறிப்பாக நீர்நிலைக்கு அருகே வேடிக்கை பார்க்க செல்லக்கூடாது எனவும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவதுடன் பெற்றோர்களுக்கும் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தலைமையாசிரியர்கள் கோரப்படுகிறார்கள்.

6.ஆற்றில் வெள்ளப்பெருக்கெடுத்து ஓடும் வழியினை, மழைக்காலங்களில் பள்ளிக்கு வரும் போதும், திரும்பி செல்லும் போதும் மாணவர்கள் அவ்வழியினை பயன்படுத்துவதை தவிர்த்திட அறிவுறுத்த வேண்டும்.

7. பள்ளியை விட்டு செல்லும் போது பழுதடைந்த அல்லது அறுந்து கிடக்கும் மின்கம்பிகளை மாணவர்கள் தொடுவதோ அல்லது அருகாமையில் செல்வதோ கூடாது என்று அறிவுறுத்த வேண்டும்.

8. மாணவர்கள் சாலையில் மழைநீர் கால்வாய் இருக்கும் இடங்களில் கவனமாக செல்வதுடன் அதன் அருகில் செல்வதை தவிர்க்கவும் அறிவுறுத்த வேண்டும்.

9.பள்ளி வளாகத்தில் விழும் நிலையில் மரங்கள் ஏதேனும் இருப்பின்அதனை உடனடியாக அப்புறுப்படுத்த வேண்டும்.

10.பள்ளி வளாகத்தில் ஆபத்தான நிலையில் உள்ள உயர்மின் அழுத்தமுள்ள மின்கம்பங்கள் மற்றும் அறுந்து தொங்கக்கூடிய மின்கம்பிகள் இருப்பின் அவைகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

11.சுவிட்சுகள் சரியாக உள்ளனவா மழைநீர்படாத வண்ணம் உள்ளனவா என்பதையும் தலைமையாசிரியர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

12 மாணவர்களைக் கொண்டு மின்சாதனங்களை கண்டிப்பாக இயக்கக்கூடாது.

13. பள்ளியில் உள்ள அனைத்துக் கட்டிடங்களின் மேற்கூரைகள் உறுதியாக உள்ளனவா என்று அவ்வப்போது ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், தேங்கியுள்ள நீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

14. பள்ளி வளாகத்தில் கட்டிட பராமரிப்பு பணிகள் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு மாணாக்கர்கள் செல்ல தடைவிதிக்கவும், பள்ளங்களை சுற்றி பாதுகாப்பான தடுப்பு அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

15. மழைக்காலங்களில் தங்களை மழையில் இருந்து காத்துக்கொள்ள மாணவர்கள் மரங்களின் கீழ் ஒதுங்குவது கூடாது என்றும் அதனால் மாணவர்களுக்கு இடி, மின்னல் போன்றவற்றிலிருந்து ஆபத்து நேரிடக் கூடும் எனவும் அறிவுறுத்த வேண்டும்.

16. பருவகால மாற்றங்களால் மாணக்கர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து (குறிப்பாக டெங்கு, சிக்கன்குனியா போன்ற காய்ச்சல்களிலிருந்து) பாதுகாத்துக்கொள்வதற்கான அறிவுரைகளை ஏற்கெனவே அறிவுறுத்தியபடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், காய்ச்சல் இருப்பின் காலதாமதம் இல்லாமல் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனை / ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சென்று மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும்.

17. பள்ளி வளாகத்திற்குள் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிபடுத்தும் வகையில் அனைத்து நடவடிக்கைகளும் பள்ளித் தலைமையாசிரியரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

18. பள்ளியில் இடிக்கப்படவேண்டிய கட்டிடங்கள் ஏதேனும் இருப்பின் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் சத்துணவு அறையை பொருத்தவரையில் வட்டார வளர்ச்சி அலுவலர் / உரிய உள்ளூர் அமைப்பு அலுவலர்களை அணுகி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும்தெரிவிக்கப்படுகிறது. அரசு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளை பொருத்தவரையில் பொதுப்பணித்துறை அலுவலர்களை அணுகி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், தனியார் மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகள் தங்களது சொந்தப் பொறுப்பில் பழுதடைந்த கட்டிடங்களை அகற்ற வேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி கூடுதல் கவனத்துடன் செயல்பட அனைத்துவகை தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(ஓம்) க. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்துவகை உயர் / மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
மற்றும் முதல்வர்கள்,வேலூர் மாவட்டம்.
அனைத்துவகை தொடக்க / நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் (சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலமாக)

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்

நகல்
சென்னை, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.

சென்னை, தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.